பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 17 புதன்கிழமை (29-04-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 153

# வடக்கு-கிழக்கு இணைப்புக்கு சுதந்திரக் கட்சி இணக்கம்?

## அம்பாறையை ஊவாவுடன் இணைக்க வேண்டும் என்கிறது

கொழும்பு, ஏப்ரல் 29

வடக்கு — கிழக்குப் பகுதிகளை இணைத்து, ஒன்றிணைந்த அரசியல், நிர்வாக அமைப்பை உருவாக்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டுள்ளதாக அறிய வருகிறது.

அம்பாறை மாவட்டத்தை முற்றாக ஊவா மாகாணத்துடன் சேர்த்துவிட்டு, வடக்கு — கிழக்கை ஒன்றிணைப்பதற்கு கட்சி யோசனை தெரிவிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு வடக்கு—கிழக்கு இணைப்பு அவசியமே என்ற கருத்து இப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரங்களில் தோன்றியுள்ளதாகவும் —

இந்த எதிர்பாராத திருப்பம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு ஓர் ஆரம்ப அத்திவாரமாக அமையலாம் என்றும் — கொழும்பில் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

இதுவரை காலமும் இணைப்புக்கு சுதந்திரக் கட்சி வட்டாரங்களில் ஆதரவு இருக்கவில்லை பெரும்பாலானோர் அதனைத் தீவிரமாக எதிர்த்து வந்தனர். எனினும் தெரிவுக்குழுவுக்குத் தலைவராக உள்ள திரு. மங்கள முனசிங்கா இதுவிடயத்தில் அடிப்படையானர்களின் ஆதரவைத் திரட்டி கொள்கையளவில் இணங்கவைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வடக்கு - கிழக்கு இணைப்பை

[3 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முனி



உது...... ஒல்லாயிருக்கிற தாயத்தை துண்டாடிற திட்டம் எல்லோ......!

### மே தினத்தை முன்னிட்டு

## சூரிச், ஜெனீவா நகரங்களில் புலிகள் ஆதரவு ஊர்வலம்

சூரிச், ஏப். 29

ஜெனீவா, சூரிச் நகரங்களில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் ஆதரவிலான மே தின ஊர்வலங்கள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

சூரிச் ரயில் நிலையத்துக்கு அருகில் இருந்தும்—

ஜெனீவா ரயில் நிலையத்துக்கு அருகில் இருந்தும் ஊர்வலங்கள் ஆரம்பமாகவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஊர்வலங்களில் பெரும் எண்ணிக்கையான ஈழத்தமிழர்களும், புலிகளின் ஆதரவாளர்களான வெளிநாட்டவர்கள் பலரும் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. [ஒ-3]

## ஊர்காவலர் முகாம் அருகே 2 தமிழரின் சடலங்கள் மீட்பு

### மீராவோடையில் சம்பவம்

மட்டக்களப்பு, ஏப். 29

வாழைச்சேனை தமிழ்க் கிராம சேவகர் பிரிவில் இருந்து கடத்திச் செல்லப்பட்ட இரு தமிழ் இளைஞர்கள், பின்னர் மீராவோடை ஊர்காவல்படை முகாம் அருகில் இருந்து சடலங்களாக தோண்டி எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீராவோடை தமிழ் அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த திகம்பரராஜா சிவகுமார் [23 வயது], இராசலிங்கம் மகேஸ்வரன் [25 வயது] ஆகிய இரு இளைஞர்களும் கடந்த 19 ஆம் திகதி சாரமணிந்த இனந்தெரியாத நபர்களினால் கூட்டிச் செல்லப்பட்டனர் என்றும் —

அந்த இருவரும் திரும்பி வராததை அடுத்து அவர்களது பெற்றோர் கடந்த 22 ஆம் திகதி இது குறித்து பொலீஸில் முறையீடு செய்தனர் என்றும் —

அதை அடுத்து பொலீஸார் நடத்திய தேடுதலில் சம்பந்தப்பட்ட இருவரது சடலங்களும் மீராவோடை ஊர்காவல்படை முகாமுக்கு அருகில் இருந்து தோண்டி எடுக்கப்பட்டது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

வாழைச்சேனை ஆஸ்பத்தி

[3 ஆம் பக்கம் பார்க்க]

### வாழைச்சேனைப் பகுதியில்

## தமிழர்களின் நெல் படையினரால் சூறை!

மட்டக்களப்பு, ஏப். 29

வாழைச்சேனைப் பகுதியில் உள்ள மீராவோடை தமிழ்ப் பிரிவு, கிண்ணையடி முருகலான பிரதேச வயல்களில் தமிழர்களால் அறுவடை செய்யப்படும் பெருந் தொகையான நெல்லை, படையினர் பலவந்தமாக லொறிகளில் ஏற்றிச் செல்வதாக எதிர்க்கட்சி எம். பிக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மட்டக்களப்பில் கடந்த வாரம் நடந்த அரச உயர் அதிகாரிகளின் கூட்டத்திலேயே இப்படி குற்றம் சாட்டப்பட்டது.

தமிழ் விவசாயிகளுக்கே இந்த நெல் சொந்தமானது.

ஆனால் பாதுகாப்புப் படையினரோ பயங்கரவாதிகளுக்

[3 ஆம் பக்கம் பார்க்க]

### விஞ்ஞான, கணித

## ஆசிரியர் தெரிவுப் பரீட்சை அடுத்த மாதம் நடக்கும்

கொழும்பு, ஏப். 29

விஞ்ஞான, கணித பயிற்சி ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைகள் அடுத்த மாதம் நடைபெறவிருப்பதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் இரு வாரத்தில் அனுப்பப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆரம்பக் கல்வி பயிற்சி ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப்பரீட்சை, ஜூன் மாத இறுதியில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது

## பொறியியலாளர் பிடிபட்டார்

51 லட்சம் ரூபா பெறுமதியான தங்கக் கட்டிகளைக் கடத்தும் போது பிடிபட்ட கடற்படைப் பொறியியலாளர் ஒருவருக்கும் சினிமாத் தயாரிப்பாளர் ஒருவருக்கும் சுங்கத் திணைக்களம் ஒரு கோடி 53 லட்சம் ரூபாவை அபராதமாக விதித்தது.

கடந்த வெள்ளிக்கிழமை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்குகையில் அவர்கள் இருவரும் சுங்க அதிகாரிகளிடம் பிடிபட்டனர்.

## பலவந்தமாக அகதிகளை திருப்பி அனுப்பவில்லை

### அமைச்சர் சவான் கூறுகிறார்

புதுடில்லி, ஏப். 29

தமிழ் நாட்டிலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகள் பலவந்தமாக திருப்பி அனுப்பப்படுகின்றனர் என்று பத்திரிகைகளில் வெளியான செய்திகளை இந்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் திட்டவட்டமாக மறுத்தார்.

ஜனதாக் கட்சி அங்கத்தவர் சுப்பிரமணியம் சுவாமி எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## பலாலி ஷெல்லினால் நேற்று இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப். 29

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களினால் இருவர் காயமடைந்தனர். நான்கு வீடுகளும், கோயில் ஒன்றும் பலத்த சேதமடைந்தன.

நேற்றுக்காலை முதல் மாலை வரை தெல்லிப்பளை, கொல்லங்கலட்டி, மாவிட்டபுரம் அரசடி, அம்பனை, விழிசிட்டி ஆகிய பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

கொல்லங்கலட்டிப் பகுதியில் விழுந்து வெடித்த ஷெல்லுக்கு அவ்விடத்தைச் சேர்ந்த பத்மநாதன் பாக்கியலக்ஷ்மி

[3 ஆம் பக்கம் பார்க்க]

## ஜி.சீ.ஈ.(சா.) விசேட பரீட்சை முடிவுகள் வார இறுதியில்

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரணதர விசேடபரீட்சை முடிவுகள் இவ்வார இறுதியில் வெளிவரலாம் என்று பரீட்சை ஆணையாளர் திரு. ஆர்தர் வெதமுல்ல தெரிவித்தார்.

1990 ஆம் ஆண்டு நடைபெற வேண்டிய ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையே கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

இப் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் இருந்து சுமார் 50 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றி இருந்தனர். [இ]

### 1994 ஜனாதிபதித் தேர்தலில்

## எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளர் சிறிமா

கொழும்பு, ஏப். 29

எதிர்க்கட்சிகள் சார்பில் சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, 1994 இல் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக நிறுத்தப்படுவார்.

எதிர்க்கட்சிக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் அனைத்தும் அவருக்கு பூரண ஆதரவு தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர்களான திரு. லலித் அத்துலத் முதலி, திரு. காமினி திஸநாயக்கா ஆகியோரும் ஸ்ரீமாவோ பொதுவேட்பாளராக நிறுத்தப்படுவதை ஆதரித்துள்ளனர் என்றும் சொல்லப்படுகிறது.

தாய் பொதுவேட்பாளராக நிறுத்தப்படுவதற்கு மகள் அனுராவும் புதல்வி சந்திரிக்காவும் பூரண ஆதரவு தெரிவித்துள்ளனராம். [உ-எ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அப்பியாசக் கொப்பிகள், C.R கொப்பிகள் மலிவு விலையில் விற்பனையாகின்றன. மண்டேலா புத்தகசாலை, இல. 2, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். அரஸ் புத்தக நிலையம், இல. 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். [20681]

### மணமகள் தேவை

பிரான்சில் தொழில் புரியும், வடமராட்சியைச் சேர்ந்த, 33 வயதுடைய, நல்ல ஒழுக்கமான குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு அதே தகைமையில் மணமகள் தேவை. திருமணத்தைத் தீர்மானிக்கச் சீதனம் தடையாகாது. திருமணம் இங்கு நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். உடன் தொடர்பு கொள்ளவும். இல. 839, C/o உதயன், யாழ்ப்பாணம். [சி-2231]

### தவறிவிட்டது

627580843X இலக்க அடையாள அட்டையுடன் முக்கிய ஆவணங்கள் அடங்கிய வெள்ளை பேர்ஸ் 27-4-92 அத்தியடிக்கும், கைலாச பிள்ளையார் கோவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 117/4, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும். [20761]

### திருமண சேவை

இந்துக் குடும்பம், அழகிய பெண் (36), B. Sc. (Hons) ஆசிரியைக்கு (செவ்வாய் 2 இல், அச்சுவினி), பட்டத்துடன் உயர் தொழில்/ உத்தியோகமுடைய மணமகன் எதிர்பார்க்கப்படுகிறார். மணப் பொருத்தத்துக்கான ஜாதகங்கள் – தகவல்கள் பரிவர்த்தனை நிலையம், 03, யாழ். வீதி, சிறாம்பியடி, யாழ்ப்பாணம். [4806]

### இலவச திருமண சேவை

London விசாவுடன் இருப்பவருக்கு அழகான, நற்குணமுடைய, A/L படித்த, சுமாரான உயரம், செவ்வாய்க் குற்றமுள்ள, 25 வயதிற்குட்பட்ட மணப்பெண் இலங்கையில் அல்லது U.K. இல் தேவை. திருமணம் இலங்கையில் சந்திப்பு: காலையும் மாலையும் எல்லா நாட்களிலும் Nallur Marriage Bureau, 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். [20759]

வயது 28, விசாகம் 4, பாலர் பாடசாலை ஆசிரியைக்கு ஏற்ற உள்நாடு, வெளிநாடு மணமகன் தேவை. தொடர்பு ஞாயிறு காலையில். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4891]

### மணமகன் தேவை

38 வயதுப் பெண்ணுக்கு, உள்நாட்டு உத்தியோகம் வகிக்கும் அல்லது உள்நாட்டு வியாபாரம் செய்யும் மணமகன் தேவை. இலட்சுமி திருமண சேவை, செ. விசயரத்தினம், நவாலி கிழக்கு, மானிப்பாய். [20742]

## சர்வோதயம் கடனுதவி

உடுவில், ஏப். 29

வன்செயல்களால் இடம்பெயர்ந்து வந்து வலிகாமம் தெற்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட இருபத்தி நான்கு அகதி முகாம்களில் தங்கி உள்ள மக்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்புக் கடனாக 3 லட்சத்து 11 ஆயிரம் ரூபாவை சர்வோதய இயக்கம் வழங்கி உள்ளது.

சந்தை தொழில், மீன் வியாபாரம், வர்த்தக முயற்சிகளுக்கென 158 குடும்பங்களுக்கு தலா இரண்டாயிரம் ரூபா வீதம் இக் கடன் வழங்கப்பட்டது. [த 90]

## பதவி வெற்றிடங்கள்

எமது நிறுவனத்தில் கீழ்க்காணும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

1. முகாமைத்துவப் பயிலுனர் - Management Trainee
2. கணக்கியல் உதவியாளர் Accounting Assistant (இப்பதவிக்கு, முன் அனுபவம் உள்ள, கணக்கியல்துறை சம்பந்தமான கல்வி பயின்றவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.)
3. வர்ண புகைப்பட பிரதியாக்குனர் - பயிலுனர் Colour Photo Printer Trainee

விண்ணப்ப முடிவு திகதி: 09 — 05 — 1992

**கலக்சி புகைப்பட சேவை**

**GALAXY Photo Services**

1ஆவது மாடி,
337, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-2239)

---

யாழ். பல்கலைக்கழக,

## வெளிவாரிப் பட்டப் படிப்புகள் கல்லூரி,

புலோலி.

**1992/93 புதிய மாணவர்களை அனுமதித்தல்**

முடிவு திகதி: **06—06—1992**

G.A.Q / 1st in. Com.

கற்க விரும்பும் மாணவர்களுக்கு மேற்படி கல்லூரி மூலமாக பல்கலைக்கழக பதிவு செய்து கொடுக்கப்படும்.

உடன் தொடர்பு கொள்க.

A.V. தங்கராஜா,
பணிப்பாளர்.

வெளிவாரிப் பட்டப்படிப்புகள் கல்லூரி,
புலோலி. [20758]

---

## துரித மீட்டல் வகுப்பு O/L

## கலை, வர்த்தக கல்லூரி

## C. C. A

வெலிங்டன் சந்திக்கு அருகாமை,
யாழ்ப்பாணம்.

## Day Class O/L - 1992

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | திரு. இரா. செல்வவடிவேல் |
| கணிதம் | — | திரு. இரா. அருள்செல்வம் |
| சமூகக்கல்வி | — | திரு. கணேஸ் |
| தமிழ் / சமயம் | — | சிவம் பண்டிதர் |
| ஆங்கிலம் | — | திரு. தர்மலிங்கம் |
| வர்த்தகம் | — | திரு. விக்கி |

**ஆரம்பம் - 30-4-92**

காலை 8 மணி

குறிப்பு:-
மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப பாடங்களைத் தெரிவு செய்யலாம். வினா - விடை வகுப்புகளும் நடைபெறும்.

(சி-2234)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 28 — 09 — 1933

மறைவு: 11 — 05 — 1991

## திருமதி புவனேஸ்வரி குமாரசாமி

(இளைப்பாறிய ஆசிரியர் உசன் இ. ம. வி.)

திதி: 29 — 04 — 1992

எமக்காக வாழ்ந்து மறைந்த எம் இல்லற ஜோதி அம்மாவின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமகன், சகோதர, சகோதரிகள்.

'திருப்பதி',
உசன்,
மிருசுவில். [20679]

---

## கலர்ப் புகைப்பட பெரிதாக்கல்

## (Colour Enlargements)

எமது ஆய்வு கூடத்தில், சகல அளவுகளிலுமான ''பெரிதாக்கல்களை'' விரைவாக செய்து பெற்றுக் கொள்ளலாம்.

**கலக்சி புகைப்பட சேவை**

1 ஆம் மாடி,
337, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-2240)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி

## முருகையா இளையதங்கம்

தோற்றம்: 11 — 08 — 1915

மறைவு: 30 — 03 — 1992

திதி: துவாதசி

அன்பின் உருவாய், அறத்தின் பிறப்பிடமாய் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, வானுறைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் பாதங்களைப் - போற்றுகின்றோம்.

அன்னாரின் மரணச் சடங்கின் போது நேரில் வருகை தந்தோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், மலர்வளையம் வைத்தோருக்கும், இரங்கலுரையாற்றியோர்களுக்கும், ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்த உறவினர், நண்பர்கள், சுற்றத்தார் மற்றும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எங்கள் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மக்கள், மருமக்கள், பெறாமக்கள், பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள், சகலிமார்.

கதிர்கட்டியலத்தை,
இளவாலை. [4671]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# தந்திரத்துக்கு பதிலடி

இனப் பிரச்சினைக்கு எப்படியும் இந்த வருடம் முடிவதற்குள் தீர்வு கண்டு விட முடியும் என்று ஜனாதிபதி பிரேமதாசா நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

1991 டிசம்பருக்குள் இனப் பிரச்சினையைத் தீர்த்து விட முடியும் என்று சென்ற வருடம் கூறி வந்தவர் அவர். 1994 இறுதி வரை இவ்வாறே காலத்தை நீடித்து நம்பிக்கை தெரிவிக்கவே அவர் விரும்புவார்!

இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற விருப்பம் அவருக்கு இருக்குமானால் இந்த நம்பிக்கைக் கால நீடிப்புகள் தேவை இல்லை! சர்வகட்சி மாநாடுகள், தெரிவுக் குழுக்கள் எல்லாம் தேவை இல்லை. அரசாங்கமே ஒரு தீர்வை — நியாயமான தீர்வை — தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய தீர்வை — முன்வைத்து துணிவுடன் செயலாக்கலாம்.

இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டியது அரசாங்கம். அவ்வாறு செய்வதற்கு ஏனையோரின் ஒத்துழைப்பும் தேவை என்பது உண்மைதான். ஆனால் அரசு தனக்குள்ள பொறுப்பை சர்வகட்சி மாநாட்டிடமும், தெரிவுக் குழுவிடமும் மெதுவாக சுமத்தி விட்டு தான் நழுவப் பார்க்கிறதென்றால் இனப்பிரச்சினைக்கு எப்படித் தீர்வு கிட்டும்?

சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்ட போதும், அரசமைப்பின் ஆறாவது திருத்தம் கொண்டு வந்து நாடாளுமன்றத்திலிருந்து தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை இல்லாமற் செய்த போதும்—

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் போன்ற கொடிய சட்டங்களைக் கொண்டு வந்த போதும், 1987இல் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்ட போதும்—

சிங்கள அரசுகள் சர்வகட்சி மாநாடுகளைக் கூட்டினவா? தெரிவுக் குழுக்களை நியமித்தனவா? இல்லை! அவ்வாறாயின் நாட்டின் மிகப் பெரும் பிரச்சினையான தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மட்டும் இவை எல்லாம் எதற்காக?

தமிழர்களை அடக்குமுறைக்கு உட்படுத்த—அடக்கி ஆள — அவர்களின் உரிமைகளைப் பறிக்க— சர்வகட்சி மாநாடுகள், தெரிவுக் குழுக்கள் தேவைப்படவில்லை.

ஆனால், தமிழர்களின் உரிமைகளை வழங்குவதற்கு மட்டுமே மாநாடுகள், குழுக்கள் எல்லாம் தேவைப்படுகின்றன!

இவை யாவும் காலம் வாங்கும்- காலம் கடத்தும்- தந்திர வழிகளே அன்றி உருப்படியானவை அல்ல.

ஆனால் ஒன்று. இவ்வாறு காலம் கடத்துவதால் நட்டம் சிங்களவருக்கே அன்றித் தமிழருக்கு அல்ல. தமிழர்கள் தமக்கென ஒரு தனிநாட்டை உருவாக்க தென்னிலங்கையர்கள் நல்ல கால அவகாசம் தருகிறார்கள்!

அந்தக் காலத்தை — வாய்ப்பை — தக்கவாறு பயன்படுத்தத் தமிழர்கள் தீவிரமாக, திடசிந்தையுடன், விடுதலை உணர்வைப் பெருக்கிப் போராட வேண்டும். அதுவே காலம் கடத்தும் தந்திரத்துக்குப் பதிலடியாக அமையும்!

---

600 வருட சரித்திரத்தில்

# பிரிட்டிஷ் சபாநாயகராக பெண் ஒருவர் தெரிவு

லண்டன், ஏப். 29

பிரிட்டிஷ் நாடாளுமன்றமான காமன் சபையின் முதலாவது பெண் சபாநாயகராக தொழிற் கட்சியைச் சேர்ந்த வெட்றி வூத்ரோய்ட் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பிரிட்டனில் சபாநாயகர் பதவி ஏற்படுத்தப்பட்டு 600 வருட காலச் சரித்திரத்தில் பெண் ஒருவர் சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது இதுவே முதல் தடவை ஆகும்.

அத்துடன் இரண்டாவது உலக மாயுத்தத்தின் பின்னர் ஆளுங்கட்சியைச் சே[illegible]த ஒருவருக்கு இப்பதவி கி[illegible]த்திருப்பது மற்றொரு விசேட அம்சம் என்று தெரிவிக்கப்படுகிறது.

சபாநாயகர் தெரிவுக்கான வாக்கெடுப்பில் வெட்றி வூத்ரோய்ட்டுக்கு ஆதரவாக 372 வாக்குகளும் எதிராக 238 வாக்குகளும் கிடைத்தன.

வெட்றி வூத்ரோய்ட், தொழிற்கட்சியில் உள்ள தீவிர வலதுசாரி ஆதரவாளர் என்பது குறிப்பிடத்தக்கது. [இ-த]

---

கண்டி, மாபேரித்தன்னையில்

# 258 தமிழ்க் குடும்பங்களை வெளியேற்ற முயற்சி

கண்டி மாவட்டத்தில் உள்ள மாபேரித்தென்னை விக்டோரியா பிரிவில் நூறு வருடங்களுக்கு மேலாக வசித்து வரும் 258 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 1,200 தமிழர்களை அங்கிருந்து வெளியேற்றும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

தேசிய சால்நடை அபிவிருத்திப் பண்ணைகளைக் கொண்ட மாபேரித்தென்னை விக்டோரியாப் பிரிவு சுமார் 500 ஏக்கர் பரப்பளவில் தென்னை, மிளகு, கோப்பி, கொக்கோ போன்ற பயிர்களைக் கொண்ட விளைநிலம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இங்கு பரம்பரை பரம்பரையாக வாழும் தமிழர்களில் சுமார் 136 பேர் இத்தோட்டத்திலும், பண்ணையிலும் தொழில் செய்கின்றனர். மற்றும் சுமார் 100 பேர் வெளியே சென்று பல்வேறு தொழில்களைச் செய்து வருகின்றனர்.

தற்போது இந்த தோட்டத்தை வெளிநாட்டு நிறுவனம் ஒன்று பொறுப்பேற்றதை அடுத்தே தமிழர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த 500 ஏக்கர் தோட்டத்தில் சர்வதேச கோல்வ் விளையாட்டுத்திடல் ஒன்றையும் உல்லாசப் பயணிகளுக்கான ஹோட்டல் ஒன்றையும் நிறுவ பிரஸ்தாப வெளிநாட்டு நிறுவனம் திட்டமிட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-3]

---

# இரவு மின்வெட்டு நேரம் கொழும்பில் கொள்ளை!

கொழும்பு, ஏப். 29

தற்போது அமுலில் உள்ள ஒரு மணி நேர இரவு மின்வெட்டைப் பயன்படுத்தி கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கொள்ளைகளும் திருட்டுச் சம்பவங்களும் இடம் பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மின்வெட்டு நேரத்தில் வீடுகளில் இருந்து டெலிவிஷன், வானொலி, டெக் உட்பட பெறுமதியான பொருள்கள் அபகரிக்கப்பட்டுள்ளன என்று பொலீஸில் முறைப்பாடுகள் செய்யப்பட்டதை அடுத்து இரவு மின்வெட்டு நேரத்தில் வாகன ரோந்து நடவடிக்கைகளை தீவிரப்படுத்தும்படி பொலிஸ் தலைமையகம் உத்தரவிட்டுள்ளது.

இரவு மின்வெட்டு நேரத்தில் வீடு உடைத்தல், கொள்ளை அடித்தல் சம்பவங்கள் குறித்து வெள்ளவத்தை, கொள்ளுப்பிட்டி களனி, கம்பஹா, சபுகஸ்கந்தை, வெலிசறை, களுத்தாவை, சீதுவ ஆகிய இடங்களில் இருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று பொலீஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. [இ-த]

---

### தமிழர்களின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

குச் சொந்தமான நெல் எனக் கூறி அவற்றை எடுத்துச் செல்கின்றனர். அதனை திருப்பி விவசாயிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கூட்டத்தில் பலரும் கோரிக்கை விடுத்தனர்.

### ஊர்காவலர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட இருவரின் சடலங்களை பரிசோதனை செய்த வைத்திய அதிகாரி, ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டிருப்பதாகவும், மற்றவர் உயிருடன் புதைக்கப்பட்டு இறந்திருக்க [illegible]டும் என்றும் தெரிவி[illegible].

---

# மண்டலாபிசேக பூர்த்தி விழா

யாழ்ப்பாணம், ஏப். 29

ஏழாலை வசந்தபுரம், வசந்தநாகபூஷணி அம்மன் ஆலய மண்டலாபிசேகப் பூர்த்தி விழா நாளை வியாழக்கிழமை நடைபெறுகிறது.

அன்று காலை 7 மணிக்கு சங்காபிசேகத்துடன் பூசைகள் ஆரம்பமாகும். கவிமாமணி ந. வீரமணி ஐயரால் அம்பாள் மீது பாடப்பெற்ற திருவூஞ்சல் பாமாலை நூல் வெளியீடும் அவ்வேளை நடைபெறும்.

திருவூஞ்சலைத் தொடர்ந்து சிறப்புச் சொற்பொழிவுகளும் இசை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

ஊனமுற்ற இருவருக்கு அருள்மிகு அம்மன் தாயாரால் [illegible] [illegible]

---

எந்த உத்தரவை நிறைவேற்றுவது?

# தமிழகப் பொலிஸார் திண்டாடுகிறார்கள்!

''இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி'' யின் முன்னாள் செய்தியாளர் கே. பி. சுனிலைக் கைது செய்து தம்முன் ஆஜர் செய்யும்படி தமிழக சட்டசபை சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா நேற்று தமிழகப் பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

அந்த உத்தரவில் இருந்து தம்மை பாதுகாக்கும்படி கோரி திரு. சுனில் நேற்று புதுடில்லி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு மீதான தீர்ப்பு இன்று புதன்கிழமை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

செய்தியாளர் சுனிலை சட்டசபை விசேட கூண்டில் ஏற்றி கண்டனம் தெரிவிக்கும் பொருட்டு சபாநாயகர் அவர் மீது பிடிவிறாந்து பிறப்பித்திருந்தார்.

ஆனால் திரு. சுனில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவின் சார்பில் சட்டப்பேரவையின் பணிப்புரையை நீதிமன்றம் இடைநிறுத்த உத்தரவிட்டது.

எனினும் நீதிமன்ற உத்தரவு சட்டசபை இறையாண்மையை பாதிக்க இடங்கொடுக்க முடியாது என்று கூறி திரு. சுனிலைக் கைது செய்யுமாறு சபாநாயகர் நேற்று மீண்டும் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

இந்நடவடிக்கைகளால் சட்டசபை, நீதிமன்றம் இவை இரண்டில் எதன் உத்தரவை நடைமுறைப்படுத்துவது என்ற சிக்கல் தமிழகப் பொலீஸாருக்கு ஏற்பட்டுள்ளது.

இவை இரண்டின் உத்தரவுகளில் எது மேலாண்மை உள்ளது என்ற அரசியல் - சட்டப் பிரச்சினையும் தோன்றியுள்ளது. (அ-எ)

---

# நாளை

யாழ்ப்பாணம், ஏப் 29

தென்மராட்சிக் கல்விக் கோட்ட அதிபர், ஆசிரியர்களுக்கான அவசரக் கூட்டங்கள் நாளை நடைபெறவிருக்கின்றன.

பளை, கொடிகாமம், உசன், வரணி கொத்தணிகளுக்கு காலை 9 மணிக்கு கொடிகாமம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் —

மட்டுவில், கைதடி கொத்தணிக்கு காலை 10.30 மணிக்கு டிறிபேர்க் கல்லூரி மண்டபத்திலும் கூட்டம் நடைபெறும் [உ]

★ ★ ★

சாரணர்கள், சாரணியர் வழிகாட்டிகள், அம்புலன்ஸ் படைப்பிரிவினர்கள் ஆகியோருக்கான மேதின சேவை ஒழுங்குகள் பற்றிய கூட்டம் நாளை பிற்பகல் 3 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும். (த)

---

### வடக்கு—கிழக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆதரிப்பதாக தீர்க்கமாக முடிவு செய்துவிட்டால், ஆளுங்கட்சியான ஐ. தே. கட்சியும் அதே தீர்மானத்துக்கு வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்றும் அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

இதே வேளை, வடக்கு - கிழக்கு நிரந்தர இணைப்புக் குறித்து அரசியல் கட்சிகளிடையே உடன்பாட்டை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அது சம்பந்தமான முடிவு வந்த பின்னர், அனேகமாக மே மாதம் இரண்டாம் வாரத்தின் பின்னரே தெரிவுக்குழு கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

தெரிவுக் குழுவில் உள்ள கட்சிகளிடையே நிரந்தர இணைப்புக் குறித்து இன்னமும் கருத்துடன்பாடு காணப்படவில்லை என்றும்—

அதனாலே குழுக் கூட்டம் திட்டமிட்டவாறு இம்மாதம் மூன்றாம் வாரத்தில் கூடவில்லை என்றும் கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் சுட்டிக்காட்டின. [அ-3]

---

# பெற்றோல்மக்ஸ் வெடித்து ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப். 29

''பெற்றோல்மக்ஸிற்கு'' காற்று அடித்துக் கொண்டிருந்த ஒருவர் அது வெடித்துச் சிதறி எரிந்ததால் உடல் முழுவதும் தீக்காயங்களுக்கானார்.

மல்லாகத்தில் நேற்று இரவு 7 மணிக்கு இடம்பெற்ற இச் சம்பவத்தில், மண்டைதீவில் இருந்து இடம்பெயர்ந்த மயில்வாகனம் மகாலிங்கம் [வயது 38] என்பவர் காயமுற்றார். [உ-15]

---

# 2 தமிழர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 29

மூதூர், சம்பூர் பகுதியில் கடந்த 22 ஆம், 23 ஆம் திகதிகளில் படையினர் இரண்டு தமிழ் இளைஞர்களை கைது செய்து முகாமுக்கு கொண்டு சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. [உ-3]

---

# தெருக்கூத்து

யாழ்ப்பாணம், ஏப். 29

மேதினத்தை முன்னிட்டு வலிகாமம் பிரிவுக் கலைஞர்களின் ஏற்பாட்டில் மேதினத்திற்கு வாரீர் என்றும் தெருக்கூத்து தெல்லிப்பழை, அளவெட்டி, சண்டிலிப்பாய், சுன்னாகம், கொட்டடி ஆகிய இடங்களில் நடத்தப்பட்டது. இந்தத் தெருக்கூத்து தொடர்ந்தும் குடாநாட்டில் பரவலாக நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. [த]

---

### பலாலி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

[வயது 46] என்ற பெண் காயமடைந்தார்.

சிறுப்பிட்டியில் குருநாதர் சுவாமி ஆலயப் பூசகர் காயமடைந்தார்..

கொல்லங்கலட்டிப் பிள்ளையார் கோவில் முகப்பு மண்டபத்தில் விழுந்த ஷெல்லினால் மண்டபம் பலத்த சேதமடைந்தது. [உ-15]

### பலவந்தமாக...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வாறு சொன்னார்.

இதேவேளை—

156 அகதிக் குடும்பங்கள் நேற்று இராமேஸ்வரத்திலிருந்து ''இராமானுஜம்'' கப்பல் மூலம் இலங்கைக்குப் புறப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது. [உ-எ-த]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 26 — 08 — 1956

விண்ணில்: 10 — 05 — 1991

### குழந்தைவேலு சுகுமாரன்
[றோயல் கல்லூரி - பழைய மாணவன்]

திதி: 29-04-1992

ஆண்டு ஒன்று சென்றபோதும்
உன் பிரிவுத் துயர்
ஆற வில்லையே!

உமது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாய், தங்கை,
உறவினர்கள்.

தேவர் ஒளவு,
சமரவாகு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை.

[20750]

## அந்தியேட்டிக் கிரியை



இசைமணி - சங்கீதபூஷணம்
'மக்குரலோன்' கந்தையா சிவபிள்ளை

மண்ணில்: 20-01-1922

விண்ணில்: 31-03-1992

எங்கள் முதல்வா மூத்த தலைவா
பெற்ற செல்வங்களை பேணிக்காத்து
அன்று 31 இல் பிரிந்து இன்று 31 நாட்களாகி
விட்டாலும்
உங்கள் நினைவையும்
இசைப்பயணத்தையும்
தொடர்ந்து செல்வோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சிவன் கோவிலடி,
வட்டு - கிழக்கு,
சித்தன்கேணி.

மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

[20768]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 29 - 4 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

## இன்று

யாழ்ப்பாணம், ஏப். 29

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று திருமலை நட்சத்திரங்கள் அணியை எதிர்த்து விநாயகர் அணி மோதவுள்ளது.

இன்று பிற்பகல் 3 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெறும். [உ]

★ ★ ★

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டம் மற்றும் அதற்கு உட்பட்ட கொத்தணிகளில் நடைபெறும் மெய்வல்லுனர் போட்டிகளில் மத்தியஸ்தம் வகிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு, இன்றும் நாளையும் காலை 8 - 30 முதல் பிற்பகல் 1 - 30 வரை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

★ ★ ★

எதிர்வரும் வெள்ளியன்று — மே தின நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுவது தொடர்பான ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக யாழ் கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவு போதனாசிரியர்களும், மாணவர்களும், மூதறிவு நிலைய அங்கத்தவர்களும் இன்று கூடி ஆராய உள்ளனர்.

இன்று காலை 9 - 30 மணிக்கு முறைசாராக் கல்விப் பிரிவில் இக்கூட்டம் நடைபெறும்.

### விபத்தில் காயம்

வெளிச்சமில்லாது மோட்டார் சைக்கிள் ஓட்டிச் சென்ற ஒருவர் எதிரே வந்த வேறொரு வெளிச்சமில்லாத வாகனத்துடன் மோதுண்டதில் தலையில் படுகாயமடைந்தார்.

சாவகச்சேரி பிரதான வீதியில் நேற்று அதிகாலை வேளை இச்சம்பவம் இடம் பெற்றது.

இச்சம்பவத்தில் வளலாயைச் சேர்ந்த கணபதி இராசலிங்கம் (வயது 42) என்பவரே படுகாயமடைந்தார். இவர் ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-15)

### கடையில் திருட்டு

கொடிகாமம் நகரப் பகுதியில் உள்ள கடை ஒன்றில் இருந்து சுமார் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் கடந்த ஞாயிறன்று திருடப்பட்டன. [இ-117]

### தொழில்நுட்ப கல்லூரி

### அவசரக் கூட்டம்

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி 'மாணவர் அவை'யின் நிர்வாக உறுப்பினர்கள், வகுப்பு பிரதிநிதிகள், முதலுதவி பயிற்சி பெற்றவர்கள், உதைபந்தாட்ட, வலைப்பந்தாட்ட குழு உறுப்பினர்கள், 91-92 ஆம் ஆண்டு பகல் பகுதி நேர மாணவர்கள் ஆகியோருக்கான கூட்டமொன்று இன்று காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— மாணவர் அவை —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராமநாதன் கல்லூரி - சுன்னாகம்

### பிரத்தியேக வகுப்பு

*Dress making-Scientific Cuttingout*
*&*
*Handicraft Class*

விஞ்ஞான முறைப்படி சுலபமான முறையில் எல்லாவித உடை வெட்டுதல், உடை தைத்தல். கைவினைப் பொருட்கள் தயாரித்தல்—15 வகை மெஷினாலும், கையினாலும் எம்பிரோய்டறி, ஸ்மோக்கிங் செய்தல்.

கிழமை நாட்களில் காலை 9 00 — 12-30 வரை.

6 மாத கால பயிற்சியின் முடிவில் டிப்ளோமா தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.

சனி, ஞாயிறு நாட்களிலும் நடைபெறும்.

08-05-1992 வரை விண்ணப்பங்களை நேரடியாகக் கையளிக்கவும்.

— அதிபர்.

[20557]

## மரண அறிவித்தல்கள்

### இளையதம்பி சின்னத்தம்பி
(ஐயாத்துரை)

சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலியைச் சேர்ந்த திரு இளையதம்பி சின்னத்தம்பி (ஐயாத்துரை) அவர்கள் 27-4-1992 திங்கள் காலமானார்.

அன்னார் இளையதம்பி - பெத்தாத்தைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், விக்கினேஸ்வரன் [பிரான்ஸ்], ஸ்ரீகந்தராசா [பிரான்ஸ்], ஸ்ரீபதிதாசன் [லண்டன்], பத்மாவதி, லீலாவதி, சிவாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்லையா, சுப்பையா, சின்னத்துரை, தங்கம்மா, நல்லம்மா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 28-4-92 செவ்வாய்க்கிழமை சிறுப்பிட்டியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;

திருமதி சி. பரமேஸ்வரி,
(மனைவி)

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.

(4808)

### முருகேசு இராசரத்தினம்
[ஓய்வு பெற்ற பிஸ்கால் உத்தியோகத்தர்]

கட்டப்பிராயை பிறப்பிடமாகக் கொண்டவரும், குப்பிளானை வதிவிடமாகக் கொண்டவருமான முருகேசு இராசரத்தினம் 28-04-92 இல் காலமானார்.

அன்னார் மூத்ததம்பி முருகேசுவின் மகனும், பவளத்தின் அன்புக் கணவரும், கௌரிதேவி, பாக்கியநாதன், சந்திராதேவி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், லோகநாதன் [நீதிமன்றம், மல்லாகம்], சிவஞானவதி ஆகியோரின் மாமனாரும், தர்சிகா, தர்சன், சந்திகா, கீர்த்திகா ஆகியோரின் பேரனும், தம்பிராசா, ஜெகராசசிங்கம், அரசரத்தினம், திருமதி லோகநாதன் புவனேஸ்வரியின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

மு. தம்பிராசா
[சகோதரன்]

குப்பிளான்.
[20770]

### சண்முகம் கந்தையா

காரைநகரைப் பிறப்பிடமாகவும், ஐயனார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் கந்தையா ஆசாரியார் நேற்று காலமானார்.

அன்னார் செல்வராணியின் அன்புக் கணவரும், உருத்திராணியின் தந்தையும், சைலாயநாதனின் அன்பு மாமனாரும், ச. சுந்தரம் ஆசாரியாரின் சகோதரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை இன்று புதன்கிழமை கோம்பயன்மணல் மயானத்தில் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

ச. சுந்தரம் ஆசாரியார்

[20772]